ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2193/6 - 2020 සැප්තැම්බර් මස 14 වැනි සඳුදා - 2020.09.14

*2193/6 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**தென் மாகாண மாகாண சபை**

*தென் மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நிதி (திருத்த) நியதிச் சட்டத்தின் 104அ. (12) ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்படுகின்ற நடைமுறை விதிகளின் திருத்தம்*

*தென் மாகாண ஆளுநர் விலியம் விஜேசிங்க கமகே ஆகிய நான், 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கங்கொண்ட தென் மாகாண சபையின் நிதி (திருத்த) நியதிச் சட்டத்தின் 104 அ.(12) ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்படுகின்ற நடைமுறை விதிகளின் 2118/43 ஆம் இலக்க அதிவிசேடமான வர்த்தமானப் பத்திரிகையில் 1 ஆம் பிரிவின் (ii) மற்றும் (iii) ஆம் உப பிரிவு மற்றும் 8 ஆம் பிரிவைத் திருத்தம் செய்வதற்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(இ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், இங்கு கீழே பிரசுரிக்கப்படுகின்ற "மாகாண ஊக்குவிப்புக் கணக்கு நிருவாகத்திற்கான சட்டங்கள்" வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படுகின்ற திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.*

**விலியம் விஜேசிங்க கமகே,**
*தென் மாகாண ஆளுநர்.*

*தென் மாகாண ஆளுநர் அலுவலகம்,*
*காலி,*
*2020, செத்தெம்பர் 09.*

தென் மாகாண மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நிதி (திருத்தப்பட்ட) நியதிச் சட்டத்தின் 104 அ(12) ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்படுகின்ற நடைமுறை விதிகளின் 2118/ 43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1 ஆம் பிரிவின் (II) ஆம் உப பிரிவின் திருத்தம்.

1. தென் மாகாண மாகாண சபையின் 2018 ஆம் இலக்க நிதி (திருத்தப்பட்ட) நியதிச் சட்டத்தின் 104 அ (12) ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்படுகின்ற நடைமுறை விதிகளின் இல. 2118/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1 ஆம் பிரிவின் (II) ஆம் உப பிரிவின் முடிவில் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலம் இந்தப் பிரிவு இத்தால் திருத்தப்படுகின்றது.

(II) தென் மாகாண பிரதான செயலாளர், தென் மாகாண பிரதிப் பிரதான செயலாளர் (நிதி) மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் மதிப்பீட்டுக் குழுவுக்கு பங்கேற்கும் தென் மாகாண கருவூலத்தின் முகவர்கள் ஆகிய உத்தியோகத்தர்களும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டத்தில் உட்படுவதோடு அதற்காக அவ்வுத்தியோகத்தர்கள் தென் மாகாண இறைவரித் திணைக்களத்தின் வரவுப் பதிவு இடாப்புகளில் வருகை தருவதையும், வெளிச்செல்லலையும் கையொப்பமிடுதல் கட்டாயமில்லை.

தென் மாகாண மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நிதி (திருத்தப்பட்ட) நியதிச் சட்டத்தின் 104 அ(12) ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்படுகின்ற நடைமுறை விதிகளின் 2118/ 43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1 ஆம் பிரிவின் (III) ஆம் உப பிரிவின் திருத்தம்.

2. தென் மாகாண மாகாண சபையின் 2018 ஆம் இலக்க நிதி (திருத்தப்பட்ட) நியதிச் சட்டத்தின் 104அ (12) ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்படுகின்ற நடைமுறை விதிகளின் 2118/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1 ஆம் பிரிவின் (III) ஆம் உப பிரிவில் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலம் இந்தப் பிரிவு இத்தால் திருத்தப்படுகின்றது :

(III) தென் மாகாண பிரதான செயலாளர், தென் மாகாண பிரதிப் பிரதான செயலாளர் (நிதி) மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் மதிப்பீட்டுக் குழுவுக்கு பங்கேற்கும் தென் மாகாண கருவூலத்தின் முகவர்கள் ஆகிய உத்தியோகத்தர்களுக்காக அரையாண்டொன்றுக்கு செலுத்தக்கூடிய ஊக்குவிப்புக் கொடுப்பனவு ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் மாதச் சம்பளத்தைத் தாண்டக் கூடாது. அப்படியிருந்தும் குறித்த அரையாண்டொன்றில் 2018 ஆம் இலக்க நிதி (திருத்தப்பட்ட) நியதிச் சட்டத்தின் 104 அ (12) ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்படுகின்ற நடைமுறை விதிகளின் 2118/43 ஆம் இலக்க அதிவிசேடமான வர்த்தமானப் பத்திரிகையில் பிரிவு இலக்கம் 1 (II) இன் கீழ் ஊக்குவிப்புக் கொடுப்பனவுக்கு உரிமை கோரும் உத்தியோகத்தர்களின் ஊக்குவிப்புக் கொடுப்பனவில் மாற்றம் ஏற்பட்டால் இந்த உத்தியோகத்தரின் ஊக்குவிப்புக் கொடுப்பனவு விகிதாசாரத்திலும் மாற வேண்டும். மேலும், "மாகாண ஊக்குவிப்பு நிதியக் கணக்கின்" செயற்பாடுகள் மற்றும் நிருவகித்தல் தொடர்பாகத் தீர்மானிப்பதற்கு குழு உறுப்பினர் கூட்டத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவுக்காகத் தகைமையற்ற குழு உறுப்பினர்களுக்காக ஒருவருக்கு ரூ. 15,000 வீதம் கொடுப்பனவாக வழங்கப்படும்.

தென் மாகாண மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நிதி (திருத்தப்பட்ட) நியதிச் சட்டத்தின் 104 அ(12) ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்படுகின்ற நடைமுறை விதிகளின் 2118/ 43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் 8 ஆம் பிரிவின் திருத்தம்.

3. தென் மாகாண மாகாண சபையின், 2018 ஆம் இலக்க நிதி (திருத்தப்பட்ட) நியதிச் சட்டத்தின் 104 அ (12) ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்படுகின்ற நடைமுறை விதிகளின் 2118/43 ஆம் இலக்க அதிவிசேடமான வர்த்தமானப் பத்திரிகையில் (8) ஆம் பிரிவின் பின்வரும் பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இந்தப் பிரிவு இத்தால் திருத்தப்படுகின்றது.

"விளக்கக் குறிப்பு மூலம் வருவாய் சேகரிக்கப்பட்டுள்ள கட்டத்தில்" என்பது, விண்ணப்பதாரர் கோரிய பெறுமானம் மற்றும் விளக்கக் குறிப்பு கொடுப்பதற்கு பின் சேகரிக்கப்பட்ட வருவாய்க்கு இடையிலான வேறுபாடாகும்.

10-12

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.